

இதழ்-37
16.11.2021
பல்சுவை மின்னிதழ்
பெருவெள்ளத்திற்கான பயணம்

# இரத்தத்தைக் கொடுங்கள் மற்றும் உலகைத் துடிக்க வைத்திருங்கள்

ஆசிரியர் பதிவு

இது 2021ஆம் ஆண்டுக்கான சர்வதேச குருதிக்கொடையாளர் தின பிரதான முழக்கமாகும். 1 நன்கொடை 3 உயிர்களைக் காப்பாற்றுகின்றது. எனவே உயிர்களைக் காப்பாற்றுவதன் மூலமும் மற்றவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதன் மூலமும் உலகைத் துடிப்புடன் வைத்திருக்க இரத்த தானம் செய்பவர்களின் அத்தியாவசிய பங்களிப்பை சர்வதேச குருதி கொடையாளர் தின முழக்கம் எடுத்துக்காட்டுகிறது.

இவ்மின்னிதழின் ஆசிரியர் பதிவு குருதி தானத்தை முதன்மைப்படுத்துவது யாழ்ப்பாண போதன வைத்தியசாலையில் நிலவும் குருதி தட்டுப்பாட்டை சமூகத்துக்கு சொல்ல வேண்டிய தேவைப்பாட்டிலேயே ஆகும்.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை குருதி வங்கி குருதி சேமிப்புக்களற்ற கையறுநிலையில் இருப்பதாக குருதி கொடையாளர்களுக்கு அழைப்பு விட்டுள்ளது. இரத்த வங்கியில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த குருதியின் அளவு 330 பைந்து ஆகும். ஆனால் தற்போது இருக்கும் குருதியின் அளவு மட்டுப்பாடாகவே காணப்படுவதாகவும், ஒரு வார காலப்பகுதிக்குள் குருதிக்கொடை யாளர்கள் நிறைவான தானம் செய்ய தவறின் எதிர்காலத்தில் ஏற்படுகின்ற அனர்த்தங்களுக்கோ அல்லது விபத்திற்களுக்கோ, சத்திர சிகிச்சைகளுக்கோ, மகப்பேற்று சத்திர சிகிச்சைகளுக்கோ மற்றும் குருதிச்சோகை நோயாளர்களுக்கோ குருதியை வழங்க முடியாத ஆபத்தான நிலைக்கு இரத்த வங்கி தள்ளப்பட்டும் என்ற கவலையை வெளிப்படுத்தி உள்ளனர்.

குருதிக்கொடை தொடர்பாக சமூகத்தில் உள்ள தவறான பிரச்சாரத்தை தவிர்த்திடுங்கள். உடல் ஆரோக்கியம் பரிசோதிக்கப்பட்டே குருதி பெறப்படுகிறது. இரத்த தானம் செய்வது இருதய ஆரோக்கியத்தைக் கண்காணிக்க மற்றொரு வழியாகும்.

குருதிக்கொடை சமூகத்துக்கு மாத்திரமின்றி குருதிக் கொடை யாளருக்கும் ஆரோக்கியமான செயற்பாடாகும். இரத்ததானம் செய்வது தொடர்பாக பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளலாம்.
0212223063
0772105375



www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

துமி பல்சுவை மின்னிதழ்

ஆசிரியர்
ச. சந்தோஷன்

இணை ஆசிரியர்கள்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்
த. அபிவர்ணா

வடிவமைப்பாளர்
வ. குணநீதன்

செய்தியியலாளர்
ந. மயூரன்

## இவ்விதழில் துமித்துளை...

04 துருப்பிடிக்காதது எலும்பு மட்டும் தான்
06 சித்திராங்கதா
10 கண்ணுக்குள்ளே உன்னை வைத்தேன் கண்ணம்மா
15 சித்திரக்குள்ளனின் சாபம்
18 அவள்
19 படுள்ஸ்
20 மலையக மக்களும் குடியுரிமைப் பிரச்சினையும்
24 என் பெண்மையின் பரிபூரணமே..
29 குறுக்கெழுத்துப்போட்டி
31 ஈழச்சூழலியல்
35 துமியாரின் பதில்கள்
38 2021 T20 உலகக்கோப்பை நடந்தது என்ன?

தவிர்க்க முடியாத காரணங்களால் சிங்ககிரித்தலைவன் தொடர் இம்முறை இடம்பெறாமைக்கு மன்னிக்க வேண்டுகிறோம்.

# துருப்பிடிக்காதிருப்பது எலும்பு மட்டும்தான்

“இலங்கையில் சடலமாக மீட்கப்பட்ட தமிழக மீனவர் - திருமணமாகி 40 நாட்களே ஆனவர்”


“கடலுக்கு சென்ற மீனவர்கள் இருவர் காணாமல் போயுள்ளனர். யாழ்ப்பாணம் – நெடுந்தீவு கடற்பரப்பில் காணாமற்போன இரு மீனவர்களை தேடும் நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.”

“தமிழக மீனவர்கள் சென்ற படகு லட்சத்தீவு அருகே கடலில் மூழ்கியது: மீனவர்களை தேடும் பணி மும்முரம்”

“யாழ் வடமராட்சி கடற்பரப்பில் கடற்தொழிலுக்கு சென்ற பதினைந்திற்கு மேற்பட்ட படகுகளும் நாற்பந்தைந்திற்கும் அதிகமான மீனவர்களும் நான்கு நாட்களாகியும் இன்னும் கரை திரும்பவில்லை என்று உறவினர்கள் பொலீஸில் முறையிட்டுள்ளனர்.”

இப்படி இன்னும் பல செய்திகள் எமக்கு கேட்டு கேட்டு பழகிவிட்டது. அந்த செய்திகளில் பெரும் சுவாரசியம் எதுவும் இல்லாததால் அவற்றை நாம் உண்மையில் பொருட்படுத்துவது கூடக் கிடையாது.

பத்திரிகைகளில் குறுகிய இடத்தில் சிறிய தலைப்புகளில் கடந்து போகும் இந்தச் செய்திகள் நமக்கும் ஒரு மீனவக் குடும்பத்தலைவனிற்கும் வெவ்வேறானவை.
கடல் என்றால் பயந்தான். ஆனால் பயந்தால் யார் வாழவைப்பது? யார் வாழ விடுவது?
என்னதான் செய்யினும் கடலைமட்டுமே நம்பி கடமை செய்யும் கரைவாழ் மக்களின் கண்ணீரில் உப்பின் செறிவை ஒப்பிட்டுப் பார்க்கவே இம்முறை அட்டையில் ஒரு காட்சி சாட்சியமாகிறது.



மீண்டும் ஒருமுறை முன் அட்டையை உற்றுப் பாருங்கள். இந்த உப்புக் காற்றில் துருப்பிடித்துக்கிடக்கிறது ஒரு சுக்கான்.

சுக்கான் இரும்பில் துரு. சமைக்கும் அடுப்பில் துரு. நட்ட கம்பியில் துரு. விசைப்படகின் விளிம்பில் துரு. இன்னும் துருப்பிடிக்காதிருப்பது அவர்களின் எலும்பு மட்டுந் தான்.

காற்றை எதிர்த்துக் கடலையே கிழிக்கும் வீரர்களால் தம் குடும்பத்தின் வறுமைக்கோட்டை மட்டும் தாண்டிச் செல்ல முடிவதில்லை. ஆனால் விடாத உழைப்பில் வெற்றி கிட்டும் என்கிற நம்பிக்கையையே வாழ்நாள் முழுக்க சுமக்கின்றனர். கரையில் தொலைத்த வாழ்க்கையைக் கடலில் தொடர்ந்தும் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

மனிதனின் முதல்தொழில் மீன்பிடித்தல்தான். வேட்டையே மீன் வேட்டையில்தான் ஆரம்பித்தது. அந்தப் பழந்தொழில் செய்த இனம் இன்னும் பழையதாகவே இருக்கிறது. துருப்பிடித்த வாழ்க்கையிலும் தொழில் தர்மம் மட்டும் காக்க அவர்கள் தவறியதில்லை.

ஆனைக்கொரு காலம். பூனைக்கொரு காலம். இவர்கள் ஆனையும் இல்லை. பூனையும் இல்லை. இவர்களுக்கென்றொரு காலத்தை இவர்கள் கனவில் மட்டுமே காண்கின்றனர். மீன்நாற்றத்தில் மூக்கு முடிக்கொள்கிற சில மனிதர்களைப் போலவே இவர்களையும் பார்த்துக் கண்முடிக் கொள்கிறது காலம்.

இயற்கை தாலாட்டினால் இந்தக் கடல் இவர்களுக்குத் தொட்டில். இயற்கை தள்ளிவிட்டால் இதே கடல் - கல்லறை. பொங்கினாலும் பொறுத்தாலும் அவர்கள் நெய்தலின் தெய்வமல்லவா கடல் மாதா? கைதொழ கடைசி வரை மறக்கமாட்டார்கள்.

கரைகளில் நின்று கால் நனைத்து மகிழும் எமக்கும் இவர்களிற்கும் கடல் என்பது வேறுவேறானது. கடல் மீது இவர்கள் கொண்ட பயமோ பற்றோ பக்தியோ பாசமோ நன்றியோ நம்பிக்கையோ எதுவும் எம்மால் உணரமுடிவதில்லை. அது கடலோடு அவர்கள் கொண்ட “காதல்”

**எத்தனை செய்திகள்**
**பத்திரிகைகளில் வந்தாலும்**
**படித்து மூடி வைத்து விட்டு**
**மீண்டும் கடலை நோக்கியே**
**பயணிக்கும்**
**அவர்கள் காதல் எப்போதும்**
**புனிதமானது!!!**
**மனிதர் உணர்ந்து கொள்ளவும்**
**முடியாதது!!!**

# சித்திராங்கதா

36

காவ்யமோகன்

## புகழின் மயக்கத்தில்

அதியுச்ச சோகத்தில் புத்தி அவ்வளவாக வேலை செய்வதில்லை என்பதனை சாதகமாக்கி சித்திராங்கதாவை தன் இல்லம் நோக்கியே வரவழைத்து விட்டான் உக்கிரசேனன். அவளும் அதிகம் யோசனையில் ஆழ்ந்தவாறே உக்கிரசேனனின் சிறுமனைக்கு வந்து சேர்ந்தாள்.

“நாட்டிய கலாராணிக்கு என் காலை வணக்கம்”

என்று வணங்கி வரவேற்றான் வன்னி மன்னன் வன்னியத்தேவன். உக்கிரசேனனும் ஓரமாக வணங்கிய படி நின்றான்.

வன்னி வேந்தர் தனக்கு இத்தகைய மரியாதை அளிப்பதில் ஆச்சர்யம் கொண்டாள் சித்திராங்கதா. தன் கலைக்கான கௌரவம் இது என கர்வத்தோடு ஏற்றுக்கொண்டே

“வணங்கங்கள் வன்னி வேந்தரே, தாங்கள் என்னை சந்திக்க விரும்பிய நோக்கத்தை நான் அறிந்து கொள்ளலாமா?”

“ஆடற்கலையின் அபூர்வசக்தி கொண்ட மாதர் தம்மை என் ராஜமாளிகையில் பெருவிருந்திற்கு அழைக்காமல் இப்படியொரு சிறு குடிலில் அழைத்ததைக்காக அதிகம் வருந்துகிறேன். ஆயினும் தங்களை காண்கின்ற வாய்ப்பை தவறவிட துணியாமலே இச்சந்திப்பை நிகழ்த்தியாக வேண்டும் என்று உக்கிரசேனனிடம் கூறினேன். தங்கள் கலையின் பரமரசிகனாய் தங்களைச் சந்திப்பதில் பேரானந்தம் கொள்கிறேன்.”

இப்படியான உயர்வுமொழிகளைக் கேட்ட சித்திரங்கதா இவ்வேளை தன் நாட்டிய அரங்கேற்றம் நிகழாமையால் மனமுடைந்து நிற்பதை அவ்விடத்தில் வெளிக்காட்டக் கூடாது என முடிவு செய்தாள்.

“தன் ஆட்டத்தை இதுவரை எங்கேனும் தாங்கள் கண்டதாய் அறியேன். உக்கிரசேனனின் வார்த்தைகளை மட்டுமே நம்பி என் பரமரசிகன் ஆனதாய்ச் சொன்னால் தாங்கள் உக்கிரசேனனின் வார்த்தைத் திறமைக்கல்லவா இரசிகனாகி இருக்கிறீர்கள்? மாறாக என் நாட்டியத்தின் இரசிகன் என்று எங்ஙனம் உரைக்கின்றீர்கள்?”

என்றாள் ஒரு மிடுக்கான குரலோடு

“தங்களது ஆட்டத்தை நான் இதுவரை கண்டதில்லை என்பது உண்மைதான். ஆனால் கண்ணால் காணாது புகழுரைகளை நம்பி பெருரசிகன் ஆவதென்பதும் பொய்க்கதையென்றல்லவே தேவி.”

“இருக்கலாம். ஆனாலும் என்

நாட்டியத்தைக் காணதவர்கள் கூறும் புகழுரைகளை ஏற்பதில் எனக்கு எப்போதும் உடன்பாடு இருப்பதில்லை”

என்று தெளிவாகவே கூறினாள்.

“காணுவதற்காகத்தானே காத்திருந்தேன். தக்க நாள் சித்திரை முழுநிலவு என பொறுமையோடு காத்திருந்தேன். அரங்கேற்ற வேளையில் யாழ்ப்பாணம் வருவதற்காய் ஆயத்தமாகவே இருந்தேன். குறித்த நாளில் நானும் வந்தேன். ஆனால் காரணங்கள் தான் எல்லாம் மாறிவிட்டன. மன்னிக்கவும். மாற்றி விட்டார்கள்.”

“மாற்றப்பட்டதே தங்களைப் போன்ற மன்னர் பிரபுக்களுக்காகத்தானே”

“ஆனால் மாற்றியது தங்கள் யாழ்ப்பாண மாமன்னர் அல்லவா? ”

“மாமன்னரின் ஆணைக்கு அரசர்கள் தாங்களே கட்டுப்படும் போது வணிகர் மகள்- நான் மட்டும் கொடி பிடித்து எதிர்க்கவா இயலும்?”



திவாகரன்

"அதெப்படிக் கூறுகிறீர்கள் தேவி? தாங்கள் வணிகர் மகள் என்பது தங்கள் பிறப்பின் அடையாளம் மட்டுமே. தங்கள் கலையழகு மூலம் நாட்டிய கலாராணியாய் மூடிசூடிக் கொண்டவராவீர்கள் தாங்கள். யாழ் வேந்தனிற்கு இத்தேசந் தாண்டி புகழோ மதிப்போ கிடைப்பதென்பது அரிது. ஆனால் தம் கலையின் புகழ் வடநாடு தாண்டியும் தமக்கு மரியாதை தரவல்லதாகும். வடநாட்டு வேந்தர்கள் கூட தம் கலையழகு கண்டால் தங்கள் காலடியில் விழுந்து கிடப்பர். ஆனால் தாங்களோ யாழ்வேந்தரின் ஆணைக்கு கட்டுப்பட்டு நிற்பதுதான் எனக்கு அநாவசிய ஆச்சரியத்தை அளிக்கிறது தேவி. தம் அரங்கேற்றத்தை தாங்கள் எக்காரணம் கொண்டும் நிறுத்தியிருக்கக் கூடாது தேவி" என்றான் வன்னியத்தேவன்.

வன்னியத்தேவர் கூறிய வார்த்தைகள் கேட்டு சித்திராங்கதா இன்னும் அதிக மிடுக்குடன் நிமிர்ந்தாள். அவள் அறிவை இயங்கச்செய்யாதபடி அப்புகழுரைகளை அவள் மீது அள்ளி வீசினான் வன்னியத்தேவன்.

"அரங்கேற்றத்தை நான் நிறுத்தவில்லை என நீர் அறிவீரன்றோ வன்னித்தேவரே, நாட்டில் அவசர கடமைகள்- அதாவது தங்களது வன்னியர் விழாவிற்காகவே நிறுத்தப்பட்டது"

"ஆமாம்... ஆமாம்... நேற்று நிகழ்ந்த வன்னியர் விழா அவ்வளவு அவசரகாரியம் போல்த்தான் நிகழ்ந்தது"

என்று கூறி கோரமாகச் சிரித்தான் வன்னியத்தேவன்.

"எல்லாம் அர்த்தமற்ற காரணங்கள் என்று தாங்கள் உணரவில்லையா தேவி? நேற்றைய விழா என்பதே வன்னியரிடம் இருந்து திறை சேர்த்துக் கொள்ள நடாத்தப்பட்ட அவசர நாடகமேயாகும். தவிர அப்படி எந்த அவசிய கருமம் பற்றியும் அங்கு பேசியதாய் எனக்கு நினைவில்லை. இது தங்களுடைய அரங்கேற்ற விழாவை அவசரமாக தடுத்து நிறுத்த வேண்டியே ஏற்பாடு செய்யப்பட்ட விழா என்றுதான் எனக்குத் தோன்றுகிறது."

"என்ன கூறுகிறீர்கள் வன்னியத் தேவரே? தாம் கூறுவது பெருங்குழப்பத்தை என்னிடம் உண்டாக்குகிறது."

"தங்களை குழப்பும் நோக்கம் என்னுடையதல்ல தேவி. அது யாழ் ராஜகுலத்தவர்கள் ஆற்றுகின்ற சதிச்செயல் ஆகும். ஆம். இன்னும் விளக்கமாய்ச் சொல்வதாயின் தன் கைப்பொம்மையாய் யாழ்வேந்தரை கொண்டு கருமமாற்றுகிற ராஜமந்திரி ஏகாம்பரம் தொண்டமனாரே இதற்கு காரணமாகும். தங்கள் அரங்கேற்றத்தை வேண்டுமென நிறுத்தியதும் அவரது கைவண்ணமே ஆகும் தேவி"

என்று எங்கோ தீர்க்கமான பார்வையுடைய கண்களோடு கூறிக் கொண்டிருந்தான் வன்னியத்தேவன்.

“ராஜமந்திரியாரா? அவர் எதற்கு அப்படிச் செய்ய வேண்டும் வன்னியத்தேவரே? தாம் கூறவருவதை தெளிவாய்க் கூறினால் உபகாரமாய் இருக்கும். மேலும் மேலும் என்னைக் குழப்பாதீர்கள்.”

“கூறுகிறேன் தேவி. ராஜமந்திரியார் என்பவர் படமெடுக்கும் ராஜநாகத்திலும் ஆபத்தானவர் தேவி. அவர் பிடியிலிருந்து தங்கள் மாமன்னர் சங்கிலியர் கூட தப்பிக்க முடியாது. தாங்களும் அந்தப் பிடிக்குள் சிக்கிக்கொண்டு விடுவீரோ என்கிற அச்சத்தில் தான் இப்போது இதை தங்களிடம் கூறுகிறேன்.”

“தாங்கள் சொல்வதே உண்மை என்றால் ராஜமந்திரியாருக்கும் எனக்கும் பகை என்ன இருக்கிறது? அவர் எதற்கான என் அரங்கேற்றத்தை நிறுத்த வேண்டும்?”

குழப்பத்தின் உச்சத்தில் அங்கே சித்திராங்கதாவிடம் பொறுமை இருக்கவில்லை. அடுக்கடுக்காய் கேள்விகளைக் கேட்டாள். வன்னியத்தேவன் கூறுவதை முழுவதுமாய் நம்ப முடியவில்லையாயினும் அதில் ஏதாவது உண்மை இருக்குமோ என்கிற கேள்வி அவளை தொடர்ந்து அவன் பதிலிற்காய் காக்க வைத்தது.

*வருவாள்...*

## சீனாவில் ஆற்றைக் கடக்கும் சிவப்பு மான்கள்

சீனாவில் சிவப்பு மான்கள் என்று அழைக்கப்படும் அரிய லுயசமயனெ இனத்தைச் சேர்ந்த மான்கள் குட்டிகளோடு டரிம் (வுயசஜைஅ) ஆற்றைக் கடக்கும் காணொலியினை வனத்துறையினர் வெளியிட்டுள்ளனர்.

சிவப்பு மான்களை கணக்கெடுக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது இந்த காட்சியை காணும் வாய்ப்பு கிடைத்ததாக குறிப்பிட்டுள்ள வனத்துறையினர் சிவப்பு மான்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.



ரசிக்கும் சீமானே..!!

# கண்ணுக்குள்ளே உன்னை வைத்தேன் கண்ணம்மா...



இ.தனிஸ்ரன்

//வேரில் நான் அழுதேன் என் பூவோ சோகம் உணரவில்லை வேஷம் தரிக்கவில்லை முன் நாளில் காதல் பழக்கமில்லை//

காதலென்ன காதல்! அன்பு - அரவணைப்பு என்பதே ரொம்பத் தூரம். கனவுகளும் கற்பனைகளும் அதீதமானவன். நிலவு போல தேய்ந்து வளரும் நிலையில்லா கற்பனை கடலில் தத்தளிப்பதும் எதிர் நீச்சலடிப்பதும் இவன் உள்ளியல்பு. ஆனால் அவன் சிந்தனை வீச்சு மனித உணர்ச்சி சீற்றங்களில் சிக்கி தவிக்காது, அறிவியல் சார் பார்வையாக மட்டுமே இருந்தது.




இப்பொழுது

//நீ என்பது எதுவரை எதுவரை நான் என்பது எதுவரை எதுவரை நாம் என்பதும் அதுவரை அதுவரை தான்//



நீயும் நானும் வேறில்லை இனி நாம் என்பதே வாழ்வின் எல்லை வரை என முழுவதுமாய் தன்னை இழந்து காதலுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறான். முப்பொழுதும் அவள் நினைவுகளால் தவிக்கிறான். தான் இப்படி ஆவேன் என்று சில வருடங்களுக்கு முதல் யாரேனும் அவனிடம் சொல்லியிருந்தால்,

யாருடா இவன் பைத்தியக்காரனென்று வைதிருப்பான். ஆனால் இன்றோ, “எப்பிடியிருந்த நான் இப்பிடி ஆகிட்டேன்“ என்ற நிலை.

*//வாழ்வென்பது ஒரு முறை ஒரு முறை*
*சாவென்பதும் ஒரு முறை ஒரு முறை*
*காதல் வரும் ஒரு முறை ஒரு முறைதான்//*



காதல் என்பது வெறும் ஓமோன்களின் ஆதிக்கம் என்று பிரசங்கம் செய்தவன், இன்று சாதாரணமாக வீதியில் நடந்தாலும் எவ்வளவு கடுமையான வேலையில் உழன்றாலும், மின்னல் கீற்றாய் இடைவெட்டி நிழலாக ஊசலாடி பின்னர் நிலையாக அவன் சிந்தனையை நிறுத்தி விடுகிறது அவளை தாங்கிய நினைவுகள். வீதிகளும் மதில்களும் ஏன் கடந்த காலமே இவனுடன் பேசும். நிச்சயமாக முன்பிருந்த இவன் இப்பொழுது இல்லை.

காதல் என்பது பித்து நிலை. முழு பைத்தியக்காரத்தனம்.



ஆனால், இருவர் இணைந்து வாழ காதல் என்ற பித்து நிலையை அடைய வேண்டியதில்லை என்பதும் இவனுக்கு தெரியாமலில்லை. அதற்கு பரஸ்பர புரிந்துணர்வே போதுமானது. ஒரு அறையில் தங்கியிருக்கும் இருவர் போல! தேவை ஏற்படும் போது உடல் ஆசையை தீர்த்துக்கொண்டும் இரு மனிதர்கள் அன்பையும் அரவணைப்பையும் நினைவுகளையும் நேரத்தையும் பகிர்ந்து கொண்டும் இன்னும் வேண்டுமென்றால் குழந்தைகளை பெற்றுக்கொண்டும் சந்தோஷமாக இங்கே வாழலாம். அதற்கு பெயர் தான் காதல் என்று யாரேனும் சொன்னால், இவன் ஒருபோதும் அதை ஏற்கமாட்டான். அதற்கு பெயர் புரிந்துணர்வு - அன்பு. அதையும் தாண்டிய நிலை தான் இவன் அகராதியில் “காதல்”.



அது அவன் அனுபவத்தில் கண்ட உண்மை.

Love is a pure Psychiatric illness.

***//ஏதோ நான் இருந்தேன் என் உள்ளே காற்றாய் நீ கிடைத்தாய் காற்றை மொழி பெயர்த்தேன் அன்பே சொல் மூச்சை ஏன் பறித்தாய்//***

தான் என்பதை தாண்டி இன்னொரு நபரை தன்னோடும் தன் வாழ்வோடும் என்றைக்குமே சேர்த்துக்கொண்டு சிந்திக்காத மனிதன் இவன். தாய், தந்தை, சகோதரர்கள், நண்பர்கள் என்று எவருமே "நான் - என் வாழ்க்கை" என்ற அவனது வட்டத்துக்குள் வந்ததேயில்லை. இன்றோ, அவளை தாண்டி சிந்திக்க முடியாமல் தவிப்பது கொடுமை. அந்த வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறான்.

பிரபஞ்சம் வழி ஏணி போட்டு கடவுளை தேடிக்கொண்டிருந்தவன், மதி கெட்டு தவிக்கும் தன் நிலையை அவளிடம் ஒப்பிக்கும் போதெல்லாம் அவள் அவனுக்கு எதிர்திசையில் பதில் சொல்வாள். இவனது அதிகபட்ச எதிர்பார்ப்பு



அவள் தனக்காக ஏங்குவதாய் உணரும் ஒரு வார்த்தை. ஆனால் அவள் வீசும் வார்த்தைகள் இவனை உலுக்கும்.

***//நீயா பேசியது என் அன்பே நீயா பேசியது தீயை வீசியது என் அன்பே தீயை வீசியது//***



அப்பொழுது கனவுகள் வழி உலகத்தை கண்டவன் இப்பொழும் காதலின் வழி - காதலி வழி உலகை பார்க்கிறான். அவள் சரியாகவே செயற்பட்டாலும் தன்னை போல அவளும் பித்தாக இருக்கிறாள் என்பதை உணர்வதற்கு இவனுக்கு ஏக்கம். அவளுக்கு அவனை நன்றாக புரிந்தாலும் அவனுக்காய் இரங்கி போகிறவள் இல்லை. காதல் எவ்வளவோ அதை விட பிடிவாதம் அதிகம். அதை இழந்துவிட்டால் தான் காதலில் தடம் புரண்டு விடலாம் என்ற எச்சரிக்கை இயல்பிலேயே இருக்கக் கூடும். இவனுக்கு பித்து முற்றும் போதெல்லாம் அவள் காதலிலாளாகி அவன் மேல் வேல் பாய்ச்சுவாள். அது தான் அவள் காதலை வெளிப்படுத்தும் நிலை. விசித்திரமான விநோதம்!

*//இரவிங்கே பகல் இங்கே தொடுவானம் போனதெங்கே*
*உடல் இங்கே உயிர் இங்கே தடுமாறும் ஆவி எங்கே*
*உருகினேன் நான் உருகினேன் இன்று உயிரில் பாதி கருகினேன்//*

காதல் காதல் என்று பைத்தியம் பிடித்து திரியும் இவன். அவனை தெரிந்தும் புரிந்தும் பிடி கொடுக்காத இவள். அவள் எரிச்சலில் உதிர்க்கும் சின்ன சின்ன சொற்களிலேயே இதயம் கிழிந்து ரத்தம் கசிவதாய் துடிக்கும் இவன், அவளை முற்றாக புரிந்து காதலில் ஆதிக்கம் செய்ய வேண்டுமென்ற ஆசையிலேயே





அடி வாங்கி பின்னால் அலைவான். வேதாளம் தொடர்ந்து தப்பித்தாலும் விக்கிரமாதித்தன் வெல்லும் நாள் வரும் என்பது இவன் நம்பிக்கை.

*//உனக்கென்றே உயிர் கொண்டேன் அதில் ஏதும் மாற்றம் இல்லை*
*பிரிவென்றால் உறவுண்டு அதனாலே வாட்டம் இல்லை*
*மறைப்பதால் நீ மறைப்பதால் என் காதல் மாய்ந்து போகுமா//*



ஏன் மறைக்கிறாள்? ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் நான் ஏன் இப்படி இருக்கிறேன்? என்னை விட்டு ஏன் இவ்வளவு தூரம் போகிறாள்? நான் என்ன பிழை செய்தேன்? ஏதும் பிடிக்கவில்லையா? ஒரே இப்படியே போனால்? இவனது சஞ்சல மனம் அத்தனை பக்கமும் கோணும். அவள் நினைத்தால், ஒரு நொடியில் அவனை சரி செய்ய இயலும்! அவள் செய்வதில்லை. அவள் செய்ய வேண்டும் என்று எதிர்பார்த்து எதிர்பார்த்து இவன் வலியும் தீர்வதில்லை.

உச்சமாய் பைத்தியம் தூய அன்பின் கத்தி முனையில் நர்த்தனமாடும்! என்னை போல அவள் காதலில் உருகவில்லையா? ஏன் அவள் என் மேல் பைத்தியமாகவில்லை?



நான் சரியில்லையா? அதற்கு தகுதியில்லையா?

*//கண்களிலே உன் கண்களிலே
பொய் காதல் நாடகம் ஏனடி.
அன்பினிலே மெய் அன்பினிலே
ஓர் ஊமை காதலன் நானடி//*

இனிக்கும் சொற்களுக்கு சொந்தக்காரி! சுடு சொற்களால் இவனை சிதைப்பாள். அந்த இடத்தில் நேரம் ஸ்தம்பிக்கும். இவனது அத்தனை சிந்தனைகளும் இடம்மாறி



அலைவரிசைகள் குழம்பி தடுமாறும். இவனது இயக்கம் நிற்கும். சுற்றி தனிமை. அவள் தன்னை விட்டு சென்று விட்டாள் என்ற வெறுமை. System collapsed.

*//நீயா பேசியது நீயா பேசியது
அன்பே நீயா பேசியது//*

ஜெஸ்! காதலர் சண்டை. அதிகம் போனால் நான்கு நாட்களுக்குள் மீண்டும் கட்டிக் கொள்வார்கள். ஆனால் இன்றைய தவிப்பு நிஜம். முழுவதுமாக காதல் என்ற பைத்தியத்தில் எவ்வளவு தூரம் தான் மூழ்கியிருக்கிறேன் என்று



இவன் உணரும் நாட்கள் அது. தன் இயலாமையை நினைத்து வெட்கிப்பான். இதிலிருந்து வெளியில் வரவேண்டும் என்று கூட நினைப்பான். அந்த முயற்சியும் அவளை பற்றியே என்பதால், அது இன்னும் ஆழத்திற்கு அவனை இழுத்து அமிழ்த்தும்.

இது இவன் கதை மட்டும் தான். அவள் கதையை சொல்வதில்லை என்பது தான் இவன் பிரச்சினை.

*//வேரில் நான் அழுதேன் என்
பூவோ சோகம் உணரவில்லை
வேஷம் தரிக்கவில்லை முன்
நாளில் காதல் பழக்கமில்லை//*

**முன் நாளில்
காதல் பழக்கமில்லை!!!**






# புதிர் 16
# சித்திரக்குள்ளனின் சாபம்

சினமிகா

தன் முயற்சியில் சற்றும் தளராத விக்ரமன் மீண்டும் மரத்திலேறி அதில் தொங்கும் உடலைக் கீழே வீழ்த்தினான். பின்னர் அதைச் சுமந்து கொண்டு மயானத்திலிருந்து செல்லும்போது, அதனுள்ளிருந்த வேதாளம், விக்கிரமனை நோக்கி,

“மன்னா! இந்த நள்ளிரவில், இந்த பயங்கரக் காட்டில் நீ எதற்காக இத்தனை சிரமப்படுகிறாய் என்பது புரியவில்லை. யசோதரன் எனும் மன்னன் தனக்கு சிறிதும் தொடர்பே இல்லாத ஒரு கந்தர்வன் தனக்குக் கொடுத்த சாபத்தினால் மிகவும் துன்புற்றான். அந்த யசோதரனுடைய கதையைக் கூறுகிறேன், கேள்” என்று கதை சொல்லத் தொடங்கியது.

நிஷாதபுரியின் மன்னன் யசோதரன் தன் குடிமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஆட்சி புரிந்து வந்தான். ராஜ்யத்தின் எல்லையிலிருந்த காடுகளிலிருந்து கொடிய மிருகங்கள் அடிக்கடி கிராமங்களில் புகுந்து மக்களுக்கு இன்னல்கள் விளைவித்ததால், அவற்றை வேட்டையாடத் திட்டமிட்டு ஒருநாள் அவன் தன் பரிவாரங்களுடன் எல்லையோரக் காடுகளுக்குள் புகுந்தான்.



யசோதரன் வேட்டையாடிக் கொண்டிருக்கையில், வானிலிருந்து ஒரு கந்தர்வனும் ஒரு கந்தர்வப் பெண்ணும் மலையுச்சியில் இறங்கி சற்றே இளைப்பாற அமர்ந்தனர். அமரன் என்ற அந்த கந்தர்வன், கந்தர்வப் பெண்ணான சர்மிளா மீது மிகவும் அன்பு கொண்டிருந்தான். மலை உச்சியில் அவர்கள் இளைப்பாறிக் கொண்டிருக்கும்போது, அவன் அவளை நோக்கி,

“சர்மிளா! இந்த மலையுச்சியிலிருந்து கீழேயுள்ள காட்சிகளைப் பார்!

ஒவ்வொன்றும் இயற்கையின் எழிலைப் பறைசாற்றுகின்றன. ஆனால் அவை ஒன்று கூட உன் அழகுக்கு இணையாகாது”
என்று கூறினான்.

ஆனால் அவள் அவன் சொல்வதைச் சிறிதும் கவனிக்கவில்லை. காட்டில் தன் புரவியில் அமர்ந்து காட்டு விலங்குளைத் துரத்தும் யசோதரனையே வைத்த கண் வாங்காமல் பார்த்து ரசிப்பதைக் கண்டதும், பொறாமையினால் அவன் இதயம் பற்றி எரிந்தது.

“நான் உன் அழகில் மயங்கி உன்னை வர்ணித்துக் கொண்டு இருக்கும்போது, நீ ஒரு மனிதனின் அழகை ரசித்துக் கொண்டிருக்கிறாய். பார், இப்போது அவனை என்ன செய்கிறேன் என்று!”

என்று சீறிக்கொண்டே யசோதரனுக்கு சாபம் கொடுத்தான்.

திடீரென யசோதரன் ஒரு சித்திரக் குள்ளனாக மாறிவிட்டான். தன் உருவம் மாறிப் போனதைக் கண்ட யசோதரன் பலத்த அதிர்ச்சியடைந்தான்.

“அடப்பாவி! என்ன காரியம் செய்து விட்டாய்?”

என்று அலறினாள் சர்மிளா.

“அவன் குதிரை மீது வாயுவேகமாச் செல்லும் காட்சியைத்தான் ரசித்தேனே தவிர, அவன் அழகில் மயங்கி விடவில்லை. இத்தனை பொறாமை பிடித்தவனா நீ?”

என்று சொல்லிவிட்டு வானில் பறந்து விட, திடுக்கிட்டு போனவன் அவளை சமாதானப்படுத்தியவாறே வானில் அவளைப் பின் தொடர்ந்தான்.

அதற்குள் காட்டில் ஒரு சூறாவளிக் காற்றுவீச, சாண் உயரமேயான யசோதரனைக் காற்று மேலே தூ க்கிச் சென்றது. பயந்து நடுங்கிப் போன யசோதரன், அந்த சமயம் வானில் பறந்து கொண்டிருந்த ஒரு கிளியின் வாலினைப் பிடித்துக் கொண்டான். அந்தக் கிளி அண்டை ராஜ்யமான அனந்தபுரியின் இளவரசி ராகலதாவின் வளர்ப்புக்கிளி. தன் தோழிகளுடன் அந்தப்புரத்தில் புதிர் வினாக்கள் கேட்டு விளையாடிக் கொண்டிருந்த ராகலதா தன் வளர்ப்புக்கிளியின் வாலைப் பிடித்துத் தொங்கிக் கொண்டு வந்த உருவத்தைப் பார்த்து வியப்பு அடைந்தாள்.

சாண் உயரமேயான உருவம், தலையில் சுண்டைக்காய் போல் ஒரு கிரீடம், கடுகுகள் போன்ற விழிகளைக் கொண்ட அந்த விசித்திரமான மனித உருவத்தை அவள் அதுவரை பார்த்ததேயில்லை. அதற்குள் அவளது தோழிகள்,

“ஆகா! இது என்ன அதிசயம்?”

என்று கூச்சலிட, ராகலதா யசோதரனைத் தன் கையில் எடுத்துக் கொண்டாள். அந்த உருவம் அசைவதைக் கண்டு இளவரசி,


“ஆகா! இது உயிருள்ள பொம்மை போலிருக்கிறது” என்றாள்.

மிக அருகில் ராகலதாவைப் பார்த்த யசோதரன் அவளுடைய அழகில் மதிமயங்கிப் போனான். மணந்தால் அவளையே மணப்பது என்ற தீர்மானித்தான்.

“ராஜகுமாரி! நான் நிஷாதபுரி மன்னன்! நான் எப்படி இத்தகைய உருவத்தைப் பெற்றேன் என்று எனக்கே தெரியவில்லை. நான் வீராதி வீரன்தான்! என்றாவது ஒருநாள் நான் சுயஉருவம் பெறுவேன்” என்றான் யசோதரன்.

“சாண் உயரத்தில் இருந்து கொண்டு இளவரசன், வீரன் என்று பேச்சைப்பார்!”

என்று தோழிகள் கேலி செய்ய ராகலதா அவர்களை அடக்கினாள். அப்போது தோழிகள் இளவரசரெனில் அறிவாற்றல் மிகுந்தவராகவே இருப்பார். அடுத்து தாங்கள் கேட்கும் புதிருக்கு சரியான பதிலுரைத்தால் நாங்களும் ஒப்புக் கொள்கிறோம் இளவரசரென என்று கூற இளவரசியும் புதிரென்றை தொடுத்தார்.



இரண்டுடன் பூச்சியத்தை கூட்டும் போது ஒன்றுக்கு சமம் என்று இவ் வெளிப்பாடு கூறுகிறது, இது நிச்சயமாக தவறானது ஆனால் ஒரு குச்சியை ஒரு புதிய நிலைக்கு நகர்த்துவதன் மூலம் சமன்பாட்டை சரியாக படிக்க முடியும். இளவரசனும் சரியான பதிலுரைக்க தோழிகள் அமைதி கொண்டனர்.

இளவரசி அவனைத் தன்னுடன் அந்தப்புரத்தில் வைத்துக்கொள்ளத் தீர்மானித்தாள். தினமும் அவனுடன் இரகசியமாகப் பொழுதுபோக்கினாள். ஒரு நாள் யசோதரனும்


“நான் உன்னிடம் அன்பு கொண்டு உள்ளேன். சுயஉருவம் பெற்றபின் உன்னையே மணப்பேன்”

என்று தனது விருப்பத்தை கூறினான் ராகலதா அதைக் கேட்டு நாணத்துடன் முகத்தை மூடிக் கொண்டாள்.

விக்ரமாதித்தனே இது உம்முடைய நேரம் யசோதரன் என்ன பதில் கூறியிருப்பார் என்று கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

தூமி அன்பர்களே நீங்களும் சிந்தியுங்கள் உமது பதிலை எமக்கு அனுப்பி வையுங்கள்.

## புதிர் 15 - விடைகள்



# அவள்...

'இளம் தாரகை'
[ஷஹ்னா ஸப்வான்]
தர்கா நகர்

அவளுக்கென்று சில ஆசைகள்
இருக்கும்..
அவளுக்கென்று சில
எதிர்பார்ப்புகள் இருக்கும்..
அவளுக்கென்று சில கனவுகள்
இருக்கும்..
அவளுக்கென்று சில ஆற்றல்கள்
இருக்கும்..
அவளுக்கென்று சில
இலட்சியங்கள் இருக்கும்..
அவளுக்கென்று சில மன
உளைச்சல்கள் இருக்கும்..
அவளுக்கென்று சில வலிகள்
இருக்கும்..
ஏன்
அவளுக்கென்று சில தூங்காத
இரவுகளும் இருக்கும்..
இவை அனைத்தையும் விட,
அவளுக்கென்றே ஒரு அழகான
குட்டி வாழ்க்கையும் இருக்கும்...
ஏன் இவள் சிறகுடைந்த
பறவையாக இருக்க வேண்டும்...

அவற்றை நீங்கள்
தெரிந்து,
புரிந்து,
அறிந்து கொள்ளுங்கள்...

உங்களில் எழும் கேள்விகளுக்கு
அவளை விடையாக மாற்ற
முயற்சிக்காதீர்...

உங்களுக்கு தோன்றிய
எல்லாவற்றையும் அவளிடம்
திணிக்காதீர்...

உங்கள் விருப்பில்
அவள் வெறுப்பைச்
சம்பாதிக்காதீர்...



அவள் உங்களுக்காக வாழ்ந்தது போதும்,
இனி - அவளுக்காக,
அவள் சந்தோஷத்திற்காக,
அவள் விருப்பிற்காக,
அவள் ஆசாபாசத்திற்காக
அவளை நிம்மதியாக வாழ விடுங்கள்...

அவள் மனதிற்குள் ஆயிரமாயிரம் இருந்தாலும்,
வெளிப்படுத்த முடியாமல் -
மனதிற்குள் பூட்டு போட்டு பேணிப் பாதுகாத்து வருகின்றாள்...
ஏனென்றால்,
இளம் மனம் கொண்ட மாது அவள்...

பாவம் அவள்,
தலையாட்டும் பொம்மையாக
அவள்...



# பபுள்ஸ்

சிறுமியொருத்தி
உதடு குவித்தூதுகையில்
குலுங்கி காற்றிலோடும் பபுள்ஸ்

ஒவ்வொன்றாய்
வெடித்துச் சிதறுகின்றன
இளமையின் பித்துக்களென
நிஜங்களில் மோதும் போதெல்லாம்.

கௌதம்

2

# மலையக மக்களும் குடியுரிமைப்பிரச்சினையும்

மு.சிவலிங்கத்தின் சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

ராசலிங்கம் கனகேஸ்வரி

மலையக மக்களின் உணர்வுகளைச் சரித்திரமாகச் சொன்னால் எத்தனை பேர் அறிந்து கொள்வார்கள். ஆனால் ஒரு கலைப்படைப்பின் ஊடே வெளிப்படுத்தும் போது அதனை எண்ணிலடங்கா மக்கள் படித்து கண்கலங்குகின்றனர். அவ்வாறு அமைந்த ஒரு சிறுகதையே ஒப்பாரிக் கோச்சி.

ஒப்பாரி என்பது இறந்தவர்களின் நினைவால் அழுது புலம்புவது. கோச்சி என்பது பயணம் செய்யும் புகைவண்டி. இரண்டிற்கும் இடையில் என்ன தொடர்பு இருக்கின்றது. ஆனால் மு. சிவலிங்கம் இரண்டிற்கும் இடையில் ஒரு தொடர்பினை ஏற்படுத்தி விடுகின்றார்.

இச் சிறுகதையும் இக்குடியுரிமை பிரச்சினையால் நாடு கடத்தப்படும் ஒரு குடும்பம் பற்றியதாகவே அமைகின்றது. நாட்டை விட்டு வெளியேறுங்கள் என கூறுவது எளிது. ஆனால் காலம் காலமாக வாழ்ந்த ஒரு இடத்தை விட்டு, அந்தச் சமூகத்தை விட்டு, அச் சூழலைவிட்டு பிரிந்து செல்வது என்பது அவ்வளவு எளிதான ஒன்றல்ல. அதனை மு.சிவலிங்கம் நன்கு அறிந்து எழுதியுள்ளார்.

“சுப்பிரமணி இந்தியாவுக்குப் போவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கின்றான். முன் பின் அறியாத ஒரு ஊருக்கு தாய்நாடு என்ற பெயரை மட்டும் வைத்துக் கொண்டு மூன்று குமரிப்பிள்ளைகள், ஊரைத்தவிர வேறொன்றும் அறியாத மனைவி, வயசாகி நடை தளர்ந்த பெற்றோர், அவர்களை இழுத்துக்கொண்டு இன்னொரு நாட்டில் போய் எப்படி புதிய வாழ்க்கையை ஆரம்பிப்பது என்ற சுப்பிரமணியத்தின் கேள்விதான் நாடு விட்டுச் சென்ற அனைவருடைய மனதிலும் இருந்தது.”

இதனை மு.சிவலிங்கம் ஒப்பாரிக் கோச்சி என்ற இச் சிறுகதையில் அழகாக வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கையில் வாழ்ந்த வாழ்க்கையை விட இந்தியா சென்று அகதிகளாக வாழும் வாழ்க்கை இதை விடக் கொடுமையானது என்ற செய்தியையும் இச் சிறுகதையில் பதிவுசெய்துள்ளார்.

“தம்பி இந்தியாவுக்கு வாற ஆசையை விட்டுபுடு. நாங்க ஏமாந்துட்டம் குடும்ப கார்டு எல்லாம் பொய். புனர் வாழ்வும் பொய். இங்கு இருக்குறவனெல்லாம்



மனுசங்களே கிடையாது. திருட்டு, ஏமாத்து, பொய்தான் வாழ்க்க”

என்ற தங்கவேலுவின் கடதாசியில் உள்ள வரிகள் இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட்டோரின் துன்பங்களை வெளியிடுவதாக அமைந்துள்ளது.

துரிதமாக இவர்களை இந்தியாவிற்கு அனுப்ப வேண்டும் என்பதில் அரசாங்கம் கடுமையாக நடந்துகொண்டது. அவர்களை அடித்து துன்புறுத்தி கோச்சியில் அனுப்பிய பதிவுகளையும் ஆசிரியர் இச்சிறுகதையில் இணைத்துள்ளார்.

“தலைமன்னார் கோச்சி பதுளையில் இருந்து காலை 6.00 மணிக்கு புறப்படும். இக்கோச்சியை ஒப்பாரிக்கோச்சி என பட்டப்பெயர் சூட்டியிருந்தார்கள்.” என்ற வரிகளில் கூறப்படுகின்ற ஒப்பாரிக்கோச்சி எனும் பெயரானது பொருத்தமானதாக அமைந்துவிடுகின்றது. காரணம் நாட்டைப் பிரிந்து செல்லும் மக்கள் இந்த கோச்சியிலே பயணிக்கிறார்கள். தங்களுக்கும் இந்த நாட்டுக்கும் தன் சமூகத்துக்குமான உறவு இந்த இடத்திலேயே அறுந்து விடுகின்றது. அதனை தாங்கிக் கொள்ள முடியாதவர்கள் கதறி





அழுகின்றார்கள். அந்தக் காட்சியை மு.சிவலிங்கம் படிப்பவரை கண்கலங்க வைக்கும் வரிகளைக் கொண்டு புனைந்துள்ளார்.

“கோச்சி வண்டிக்குள் ஏறியவர்கள் கரங்களை நீட்டி கீழே நிற்பவர்களை பிடித்துக்கொண்டு அலறும் அந்த துயரக்காட்சி உயிரையும் ஆத்மாவையும் பிடுங்கியது. ஒப்பாரி சத்தத்தோடு கோச்சி புறப்பட்டது. சட்டத்தின் முன்னால் மனித தவிப்புகள் எப்படியெல்லாம் சித்திரவதை செய்யப்படுகின்றது” என்ற ஆசிரியரின் கருத்தானது இந்த மக்களது ஓலங்களாக வெளிப்படுகின்றது.

குடியுரிமை பிரச்சினையின் பாதிப்பினை வெளிப்படுத்தும் மற்றுமொரு சிறுகதையாக “ஆயிரத்து தொளாயிரத்து நாற்பத்தெட்டு” எனும் சிறுகதை அமைந்துள்ளது. பிரஜாவுரிமை சட்டம் என்ற பெயரில் விசாரணைக்காக பல தடவை அழைக்கப்பட்டும் பிரஜாவுரிமை வழங்காமையைக் காட்டுகின்றது. இதனால் கணபதி என்பவன் படும் பாட்டையும் இறுதியில் விரக்தியில் குடித்துவிட்டு விசாரணைக்குச் சென்று சண்டை பிடிப்பதனையும் ஆசிரியர் காட்டுகின்றார். விசாரணை என்ற பெயரில் இம் மக்கள் பட்ட துன்பங்களை ஆழமாக மு.சிவலிங்கம் விளக்குகின்றார்.

மு.சிவலிங்கம் மலையக மக்களுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட சட்டங்களையும் அதனை ஆதரித்தவர் எதிர்த்தவர் பற்றிய விடயங்களையும் ஒரு கோவையாக சிறுகதைக்குள் புகுத்தி புதுமை செய்துள்ளார்.

“சுதந்திரத்தால் எல்லோரும் ஆனந்த கூத்தாடினார்கள். மலையக தமிழர்கள் முகாரி ராகம் பாடினார்கள்.”

என்ற வாசகமே மலையக மக்களின் சொல்லெனா துன்பங்களைச் சொல்லுவதாக அமைந்து காணப்படுகின்றது.

இந்த வகையில் தொகுத்து நோக்கும் போது மு.சிவலிங்கம் அவர்கள் மலையக மக்களின் துயரங்களையும் அவர்களின் துன்ப நிலையினையும் ஏனையோரின்



பார்வைக்குக் கொண்டு சென்றுள்ளார். இம் மக்கள் தன் வாழ்வின் முழு பகுதியையுமே துன்பத்திற்கு மட்டுமே அர்பணித்தவர்கள். ஒரு நாட்டில் குடியுரிமை என்பது ஒருவரின் அடையாளம். அந்த அடையாளமே கேள்விக்குரியதாகும் போது அவர்களுடைய வாழ்க்கையும் கேள்விக்குரியதாகின்றது.

இதனை மு.சிவலிங்கம் நன்கு உணர்ந்திருக்கின்றார். எனவேதான் குடியுரிமைப் பிரச்சினையால் மலையக மக்கள் பட்டத் துயரத்தையும் அதனால் அவர்கள் எதிர்நோக்கிய சவால்களையும் சிறுகதை எனும் வடிவத்தின் ஊடாக வடித்து உலகத்திறகுத் தந்துள்ளார். இவ்வகையில் இவர்களின் துன்பங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும் இன்றும் இவர்கள் மறைமுகமாக நாடற்ற அகதிகளாக கணிக்கப்படுவதே வரலாறு காணாத உண்மையாக உள்ளது.

## ஸ்பெயினில் பிறந்துள்ள அரிய வகை வெள்ளை சிங்கங்கள்

ஸ்பெயினில் உள்ள விலங்குகள் காப்பகம் ஒன்றில் இரண்டு வெள்ளை நிற ஆபிரிக்க சிங்கக்குட்டிகள் பிறந்துள்ளன. இவை தற்போது விேட பராமரிப்பு மற்றும் உணவளித்தலுக்காக அன்டலூசியாவிலுள்ள சிறப்பு அறை ஒன்றில் வைத்து பராமரிக்கப்படுகின்றன.

இவற்றின் பெற்றோர் சாதரண ஆபிரிக்க சிங்கங்களாக இருப்பதனால் அவற்றிடமிருந்து வெள்ளை சிங்கக்குட்டிகள் பிறந்துள்ளமை அனைவரையும் ஆச்சரியத்தில் ஆற்றியுள்ளது.

உலக வெள்ளை சிங்கங்கள் பாதுகாப்பு அறக்கட்டளையானது, இவை அல்பினோக்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்தியதோடு தென்னாபிரிக்காவின் Krueger தேசிய பூங்காவின் Greater Timbavati பகுதியை சேர்ந்த அரிய வகையை சேர்ந்தவை எனவும் குறிப்பிட்டுள்ளது.



1930 களில் வெள்ளை சிங்கங்கள் காடுகளில் இருந்து அகற்றப்பட்ட நிலையில் தற்போது 13 க்கும் குறைவான வெள்ளை சிங்கங்களே அவற்றின் இயற்கையான வாழிடங்களில் வாழ்கின்றன.




1

இரா.வி.நவிலன்

"ஏனோ தெய்வம் சதி செய்தது..? பேதை போல விதி செய்தது?"

வானொலியில் கனத்த ரீங்காரமாய் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. அந்த வானொலியின் ஒலி அவள் வாழ்வொலியாகவும் அவள் மனமெங்கும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. எப்படியாவது மூடிப்புதைத்து விட போராடிக்கொண்டிருக்கும் அவள் உள்ளக் கிடைக்கைகளை அந்தப் பாடல் மேலெழுப்பி விட்டது. இன்றைய அவளுடைய இரவுப்பொழுதினை ஏதோ ஒன்று ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது.

ஆனால் இது ஒன்றும் அவளுக்கு புதிதல்ல. தினமும் தன் கடைக்கு வரும் வாடிக்கையாளர்களோடு சிரிப்புஜாலம் காட்டியபடியே உரையாடி விட்டு தன் ஒவ்வொரு அந்தரங்க இரவுகளில் அந்த அழியாத சோகங்களோடு போராடுவது தான் அவளுக்கு வழக்கமாகி போய்விட்டது.

ஆனால் இன்றைய இரவு கொஞ்சம் அசாதாரணமானது. என்றும் அவளை அரவணைக்கும் அந்தக் கண்ணீர்த்தோழி இன்று ஏனோ இவளோடு இல்லை. ஆறுதல் தேடி அருகிலே உறங்கிக்கொண்டிருந்த துவாரகனை ஆரத் தழுவிக்கொள்கிறாள்.

துவாரகன் அவளுடைய மூத்த மகன். அந்த ஊர் மக்களைக் கேட்டால் "மன வளர்ச்சியற்றவன்.." "மூளை வளர்ச்சி குறைந்தவன்.." "கைகால் அசைக்க மாட்டான்.." என்று ஆளுக்கொரு கதையாய் ஆயிரம் கதைகள் அவனைப்பற்றிச் சொல்வார்கள். ஆனால் அவளைப் பொறுத்தமட்டில் "தன் மகன் துவாரகன்". அது மட்டும் தான் அவளுக்கு தெரிந்த ஒற்றை உண்மை. துவாரகனிற்கு ஊர்மக்கள் கொடுத்த அடைமொழிகளை எல்லாம் அவள் கண்டுகொள்வதே இல்லை. ஏன் கண்டு கொள்ள வேண்டும்? கண்டு கொள்வதால் மட்டும் என்ன மாறிவிடப்போகிறது?

விழித்திருக்கும் பொழுதுகளில் யாருடைய தொடுகையையும் துவாரகன் அனுமதிப்பது கிடையாது. அவன் தாயின் ஸ்பரிசத்தை தவிர. அது மட்டும் அவனுக்கு ஏனோ தேவை என்று தோன்றுகிறது. சிமிட்டும் கண்கள் மட்டுமே அவன் உடம்பில் அவன் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. ஏனைய உறுப்புக்கள் அனைத்தும் அவன் அன்னையின் அரவணைப்பிற்கே கட்டுப்பட்டது. அவன் பாதங்கள் இரண்டும் பயனற்றுப்போனதால் இரண்டு சக்கரப்பாதங்களோடு ஒரு வண்டிதான் அவன் பாதி உடலாய் அமைந்திருந்தது. தொண்டைக்குள் செல்லும் பலகாரங்களுக்கு பற்கள் செய்யும் உபகாரம் எதுவும் அவன் பற்களுக்கு தெரியாது. பற்களின் பணிவிடையும் சேர்த்து அவன் தாயின் பணி ஆனது. அரைத்த உணவுகளையே அவன் தொண்டைக்குள் அனுப்பினாள். 'அ....உ.......' என்ற எழுத்துக்கள் மட்டும் தான் அவன் மொழியில் விசாலமாய் அமைந்திருந்தன. தாய் இருக்கும் தைரியத்தில் வேண்டியதை கேட்கும் வழி தெரியாமலே ஒன்பது வருடங்கள் வளர்ந்து விட்டான்.

ஊர்மக்கள் பேச்சையெல்லாம் கண்டுகொள்ளாத அவள் மனோதிடம் கூட துவாரகனின் அன்னையாய் அவள் பெற்றுக் கொண்ட ஒரு வெற்றிதான். துவாரகன் காதுபடவே அந்த ஊர்மக்கள் பேசும் போது அந்த வார்த்தைகளின் அர்த்தம் புரியாதவனாய் அவன் பதிலளிப்பது மாறாத அந்தப் புன்னகையை மட்டுமே. அந்த கேவலமான மனிதர்களின் நடத்தைகளையும் அவர்களின் மொழிகளையும் புரிந்து கொள்ளாமல் வாழ்நாள் முழுவதும் குழந்தை போலவே சிரித்தபடி வாழும் தன் மகனின் பாக்கியத்தை எண்ணி அவள் பெருமிதப்படுவதுமுண்டு.

ஆனால் இன்றைய இரவு அவள் துணிந்து எடுத்து விட்ட இந்த முடிவுதான் அடங்காத தீயாய் மனம் முழுவதும் கனன்று எரிந்து கொண்டிருந்தது. தலைபடா இடமெல்லாம் தலையணை குளிரும் அந்த மார்கழி இரவில் அவள் மனம் மட்டும் அந்த தீயின் உஷ்ணத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுக்கொண்டிருந்தது.

'க்கும்..க்கும்...' எங்கிருந்தோ அந்த இருமல் சத்தம் நிசப்த இரவில் அவள் செவிகளுக்குள் எளிதாகவே நுழைந்து கொள்கிறது. இவளுள் எரிந்து கொண்டிருக்கின்ற தீயிற்கு தன் தந்தையின் அந்த சத்தம் தான் எண்ணெய்யை ஊற்றிக் கொண்டிருக்கிறது.

பருவப்பொழுதினை அவள் எட்டியிருந்த சமயம் ஊர் கூடித்தேர் இழுக்கும் அம்பிகையின் சிலை போல் அவள் வதனம் ஜொலிக்கும். அந்த ஊரே அவளை மிக உன்னிப்பாக அவதானித்து வந்தது. தடக்கி விழுந்தால் தூக்கி விட அல்ல. வேடிக்கை சேதியை நான்கு பேருடன் பகிர்ந்து கொள்வதற்கு.

எதிர்பார்த்த குழியில் அவளும் விழுந்தாள். இரண்டு மாதக்கருவோடு வந்து தந்தை குமாரசாமி முன் நிற்க எதிர்ப்பேச்சு பேசாமல் மறுநாளே

திருமணத்திற்கு ஏற்பாடு செய்தார் குமாரசாமி. படிப்பறிவில்லாதவன் தொழில் எங்கு தேடுவது என்று எப்படியோ பணந்திரட்டி விமானத்தில் அவனை அனுப்பி வைத்தார்.

ஐந்து வருடங்களில் திரும்பி வர கூட பணம் இல்லாமல் நின்றவனின் சேதி அறிந்து மீண்டும் பணம் அனுப்பி வீட்டுக்கு அழைத்து வந்தார். வீட்டோடு மாப்பிள்ளையாய் நகர்ந்த மூன்றாம் நாளே முக்கலும் முனகலுமாய் தொடங்கியது. தாய் தந்தை கூடவிருக்கும் தைரியத்தில் இவள் வார்த்தைகளில் வலு ஏற்றினாள். வீட்டுச்சண்டை தெரு வரைக்கும் நகர்ந்தது. சீதனம் என்னும் பெயரில் குமாரசாமியிடம் கொஞ்சம் பணம் பிடுங்கிக் கொண்டு இந்தியாவிற்கு போறன் என்று போனவன் போனவன்தான்.

“இண்ட வரைக்கும் ஒருரூவா கூட கண்ணில காட்டியிருப்பானா அந்தப் படுபாவி. அப்பாவும் எல்லாத்தையும் பொறுத்து பொறுத்து போன மனுசன். அவன் வந்த நாள்ல இருந்து அவருக்கு சந்தோசம் எண்டதே இல்லாம போவுட்டு. ஏதோ ரண்டே ரண்டு பேரப்புள்ளையல மட்டுந்தானே தரமுடிஞ்சுது அந்த ஆண்மையில்லாத கோழையால..."

படுத்திருந்த படியே உள்மொழியாய் வார்த்தைகளை முனகிக் கொண்டிந்தாள்.

புற்று நோயோடு போராடி களைத்துப் போய் காலனிடம் தோற்றுப்போன தன் மனைவியின் இழப்போடு தனிமையும் பிணியும் சேர்ந்து வாட்ட தற்போது ஒரு மூலையில் முடங்கிப்போன தன் தந்தைக்கு தான் எடுத்த முடிவு மூலம் மறுபடியும் ஏமாற்றத்தை பரிசளிக்க அவளால் முடியவில்லை. ஆனால் அவள் எடுத்த முடிவு சரியா? தவறா? என்ற எல்லையை அவள் தாண்டி விட்டாள்.

ஏதோ தீர்மானம் எடுத்தவளாய் திடீரென்று படுக்கையிலிருந்து எழுந்து யாருடைய நித்திரைக்கும் இடையூறு இல்லாமல் மெழுகுதிரி ஒன்றை பற்ற வைத்துக் கொண்டாள். அந்த ஒற்றை மெழுகுதிரியின் ஒளி அங்கே அதுவரை சூழ்ந்து கிடந்த இருள் எல்லாவற்றுடனும் போராடி அவற்றை அசுர வேகத்தில் துரத்தியடித்துக்கொண்டிருந்தது.

இந்த மாற்றத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அவளுக்கு தான் எடுத்து விட்ட முடிவிற்கு ஏதோ ஒரு படைபலம் கிடைத்து விட்டது போல் தோன்றியது. ஒரு காகிதமும் பேனையும் கையில் எடுத்துக் கொண்டாள்.

“அன்புள்ள அப்பாவுக்கு..."

என தொடங்கிய மறு கணமே எழுத்துக்களை மறைத்துக் கொண்டு கண்கள் குளமாகின. இமைகளை இறுக்கி மூடி விழிகளின் வான் கதவுகளை திறந்து விட்டாள். காகிதத்தின் மேல் பேனையின் பயணம் தொடர்ந்தது.

“என்னை முதலில் மன்னித்து விடுங்கள். அன்று உங்கள்

விருப்பம் இல்லாமல் திருமணம் செய்து கொண்டேன். இன்றுவரை அந்தப்பாவிபற்றி எந்தத்தகவலும் இல்லை. அம்மா உயிரோடு இருந்த வரைக்கும் எனக்கு பெரிதாய் எந்த குறையும் தெரியவில்லை. அம்மா போன பிறகு நீங்களும் இப்பிடிப் போய்விட்டீர்கள். என் இரண்டு பிள்ளைகளோடு அந்தக் கடையை நடத்திக்கொண்டு ஒரு தனி ஆளாய் போராடி நான் களைத்தே போய்விட்டேன். இதற்கு பிறகும் என்னால் இதனை தொடரமுடியும் என்ற நம்பிக்கை என்னிடம் இல்லை. கடந்த என் வாழ்க்கையில் பக்குவம் இல்லாமல் நான் எடுத்த பல முடிவுகளால் உங்களுக்கு பல இக்கட்டுகளைக் கொடுத்துவிட்டேன். ஆனால் இன்று நான் எடுத்த முடிவு தெளிந்த சிந்தனையோடும் நிறைந்த கஸ்டத்தோடும் எடுத்த முடிவு.

நாளை காலை நாவலடியைச்சேர்ந்த ரவிராமன் என்பவரை நான் திருமணம் செய்து கொள்ளப்போகிறேன். கடந்த ஆறு மாத காலமாய் கடையில் தனிமையில் நின்று க‘டப்பட்டுக்கொண்டிருக்கும் எனக்கு அவர் பல உதவிகளைச் செய்துள்ளார். அவரின் இவ்விருப்பத்தை எனக்கு எப்போதோ கூறிவிட்டார். என் நிலமை அவருக்கு நன்றாகவே தெரியும். நானும் கடந்த மூன்று மாத காலமாய் என் உணர்ச்சிகளோடும் சம்பிரதாயத்திற்கு இது ஒவ்வாதே. ஊரவர் வாய்கள் என்னென்னமோ



எல்லாம் பேசுமே என்ற அர்த்தமற்ற எண்ணங்களோடும் போராடிக் கொண்டிருந்தேன். திருமணம் என்கிற பெயரால் அன்று செய்த தவறிற்காக இனியும் என் தண்டனைக்காலத்தை நீட்டிக்கொள்ள நான் தயாரில்லை. அந்தப்பாவியின் மனைவியாக என் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் தியாகம் செய்ய நான் விரும்பவில்லை.

முப்பது வயதைத்தொடமுன்னே வாழ்க்கையில் காணக்கூடாத சோகத்தை எல்லாம் கண்டுவிட்டேன். என் திருமணத்திற்கு சட்டம் என்ன சொல்லுமோ எனக்கு தெரியாது. உங்கள் சம்பிரதாயம் ஊரவர்கள் என்னென்ன இழிமொழிகள் உரைப்பார்களோ எனக்கு அதைப்பற்றி கவலை கிடையாது. இன்று வரை அந்த அர்த்தமற்றவைகளால் எனக்கு எந்த பிரயோசனமும் இருந்ததில்லை.

தொடர்ந்து என் விரதத்தை காத்து அவரோடு பழகி வந்தாலும் இந்த ஊர்வாய் இன்னும் கேவலமாக பேசிக்கொண்டுதான் இருக்கும். அது என் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் வீணாக்கிவிடும். எனக்கென்று இப்போது இருப்பது நீங்களும் அந்தக்கடையும் தான். ஆனால் எதிர்காலத்தில் என் பிள்ளைகளுக்கு என்ன இருக்கப்போகிறது? இன்று வசைபாடும் இந்த உலகம் நாளை துவாரகனிற்கு ஏதும் வழி காட்டுமா? ஒருவேளை இதே உலகில் தனிமையோடே போராடி இன்னும் ஐந்து வருடங்கள் கழித்து இதே முடிவை எடுக்க நேரிட்டால் என்ன செய்வது?

என் முடிவு என் வரைக்கும் மிகச்சரியானதே. இந்த முடிவு உங்களை மேலும் வருத்தத்திற்கு உள்ளாக்கி விடுமோ என்ற கவலை மட்டும் தான் இப்போது எனக்கு உள்ளது. இதன் பிறகு உங்களோடு என் பேச்சுவார்த்தை கூட இல்லாமல் போகலாம். யாருக்கு தெரியும்? யார் மனதும் எப்படி வேணுமென்றாலும் மாறலாம். உங்களுக்கு என்முடிவு ஏற்புடையது என்றால் நாளை கோயிலில் திருமணத்தை முடித்து உங்களை சந்திக்க வரும் என்னை ஆசீர்வதியுங்கள். இல்லையென்றால் உங்கள் மகள் இறந்துவிட்டாள் என்று நினைத்துக்கொள்ளுங்கள்.

இப்படிக்கு
உங்கள் ஆசைமகள்......"

கையெழுத்து வைக்குமிடம் கண்ணீரால் ஈரமாகி இருந்தது. கடிதத்தை மடித்து காலையில் தந்தை பார்க்கும்படி மேசையில் வைத்து அவரின் சுடுதண்ணீர்ப் போத்தலையும் ஆதாரத்திற்கு மேலே வைத்துக் கொண்டாள்.

**தயாரானாள்...**

# குறுக்கெழுத்துப்போட்டி 33

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | 3 | | 4 |
| | | | | | | | |
| 5 | | | 6 | 7 | | | |
| | | 8 | | | | | |
| 9 | 10 | | 11 | | | | |
| 12 | | 13 | | | | 14 | 15 |
| | | 16 | | | 17 | | |
| | 18 | | | 19 | | | |

சரியான விடைகளை
அனுப்ப வேண்டிய முகவரி
www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

## இடமிருந்து வலம்

1- இலங்கையின் பெரிய காடு
5- இந்தியாவின் புனித நதிகளில் ஒன்று
8- இறப்பின் சத்தம் என்றும் சொல்லலாம் (திரும்பி)
9- படையல்
11- பனி (திரும்பி)
12- அப்பாவி
14- தழும்பு (திரும்பி)
16- தேவர்- எதிர்ச்சொல் (குழம்பி)
18- வீரனுக்கு இதுவும் ஆயுதம் (திரும்பி)
19- நன்மை- எதிர்ச்சொல்

## மேலிருந்து கீழ்

1- இன்றைய பாகிஸ்தானை அண்டி அன்று உருவான தொன்மையான நாகரீகம்
2- குழப்பநிலை
3- இலங்கை வேந்தன் (குழம்பி)
4- வயலும் வயல் சார்ந்த இடமும் (தலைகீழ்)
6- தைரியம்
7- ஓமம் மூலம் செய்யப்படும் மூலிகைத் தண்ணீர் (குழம்பி)
10- மழையில் காப்பது (தலைகீழ்)
13- பொய்ப் பிரச்சாரம் (தலைகீழ்)
15- பனையின் இளையது
17- பாரம்

## குறுக்கெழுத்துப்போட்டி - 32 விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ந | ர | 2 கா | 3 சு | 4 ர | 5 ன் | | 6 ப |
| ங் | | 7 நோ | க | ம் | க் | | ட் |
| 8 கூ | ச் | ச | ம் | | 9 கை | 10 த | டி |
| ர | | ய் | | 11 ல் | வ | ள | ய |
| 12 ம் | ஆ | | 13 அ | | ன் | | ல் |
| | 14 வ | த் | தி | க் | கா | 15 ன் | |
| 16 தோ | ணி | | ப | | 17 ய | வ | ல் |
| டை | | 18 ச | தி | | 19 ளி | சீ | |


06.11.2021 பிறந்த நாளைக் கொண்டாடிய, செல்வி.சாத்விகா விக்னராஜாவால், நவாலி கிராமத்தில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு பத்தாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொருட்கள், இரண்டாவது ஆண்டாகவும் தொடர்ந்து வழங்கப்பட்டது.



வீணான கொண்டாட்டங்களைத் தவிர்த்து, அற்றோர்க்கு உதவும் அறச்செயலைத் துமி குழுமம் வாழ்த்தி மகிழ்கிறது.
பல்லாண்டு வாழ்க!

## மெக்சிகோவில் கண்டெடுக்கப்பட்ட மாயன்களின் படகு

ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட படகு ஒன்று மெக்சிகோவில் சேதமடையாத நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. மாயன் நாகரிகத்தை சேர்ந்ததாக நம்பப்படும் இந்த படகு, ஊாஉைஉாபூெ ஐவணயி எனப்படும் மாயன்களின் அழிவடைந்த நகரின் அருகில் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 5 அடிக்கு சற்று அதிகமான நீளத்தையும் 2.5 அடி அகலத்தையும் கொண்டுள்ள இந்தப் படகானது குடிநீர் மற்றும் சடங்குகளுக்கான பொருட்களை கொண்டுசெல்ல பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என மெக்சிகன் தொல்லியல் நிறுவனத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# ஈழச் சூழலியல்

த.விதுர்ஷன்
மாணவன்
கொழும்பு பல்கலைகழகம்

அமில மழையினால் நீர் மாசடைதலும் உலக விஞ்ஞானப் போக்கில் நீர் மாசடைதல் காரணியாக நோக்கப்படுகின்றது. பிரித்தானிய இரசாயனவியலாளரான அங்கஸ் ஸ்மித் அவர்களினால் அமில மழை என்னும் சொல் 1872 ஆண்டு உருவாக்கப்பட்டது. உலோக மேற்பரப்புகளில் துருப்பிடித்தல், கட்டிடப் பொருட்கள் அழிவடைதல், தாவரங்கள் கருகுதல் போன்ற பாதிப்புகளை அவர் சுட்டிக்காட்டினார். மாசடையாத மழை நீர் வளி மண்டலத்திலுள்ள காபனீரொட்சைட்டுடன் சமநிலை யைப் பேணுவதன் மூலம் அதன் pH பெறுமானம் ஏறத்தாழ 5.6 காணப்படுகின்றது.

மழை நீருக்கு அனேகமான அமிலத்தன்மை வளி மண்டலத்தின் சில இடங்களில் அதிகளவான செறிவில் காணப்படும் கந்தகவீரொட்சைட்டு. நைதரசனீரொட்சைட்டு என்பன வற்றினாலாகும் உயிர்ச்சுவட்டு எரிபொருட்களை எரித்தல், உருக்கியெடுத்தல், எரிமலைகளின் தொழிற்பாடுகள், காற்றின்றிய நிலையில் சேதனப் பொருட்கள் சிதைவடைவதனால் உருவாகும் மீதைல் மெர்கெப்பரான், கார்போனில் சல்பைட் போன்ற ஏனைய வாயுக்கள் ஒட்சியேற்றமடைதல் என்பனவற்றினால் கந்தகவீரொட்சைட் உருவாகலாம். எரிபொருட்கள் தகனமடைதல், கைத்தொழிற் செயற்பாடுகள்,



வளி மண்டலத்தில் மின்னலினால் ஏற்றமடைதல் என்பனவற்றின் மூலம் வளிமண்டல மூலக்கூற்று நைதரசன் ஒட்சைட் ஆக மாற்றமடைகிறது. கந்தகவீரொட்சைட்டு, நைதரசனீரொட்சைட்டு ஆகிய இவ்விரண்டு இரசாயனங்களும் மழைத்துளிகளுடன் சேர்ந்து கீழே விழும் போது சல்பூரிக் அமிலம், நைட்ரிக் அமிலம் என்பன உருவாகின்றன.

பல இடங்களில் உள்ள பாலங்கள் துருப்பிடிப்பதற்கு அமில மழையும் காரணமாக அமைந்தது. அமில மழையினால் புகையிரதத்தின் தண்டவாளம் துருப்பிடித்ததினால் போலந்திலுள்ள சில பிரதேசங்களில் புகையிரதத்தின் வேகம் குறைக்கப்பட்டது. பூமியில் மிக அழகான கோவிலாக கருதப்படும் பார்த்தினன் ஆனது ஏதென்சில் அக்குறோபோலிசில் அமைந்துள்ளது. அட்டினா எனப்படும் அழகிய ஏதென்ஸ் புரவலர் தெய்வத்தினை மகிமைப்படுத்தும் முகமாக இந்த கோவில் கி.பி. 447 இல் கட்டப்பட்டது. இந்தக் கோவிலில் அமில மழையினால் பாதிக்கப்பட்ட பளிங்குக் கற்களாலான பல



சிலைகள் காணப்படுகின்றன. கிறீசிற்கான பிரித்தானிய தூதுவர் லோட் எல்யின் என்பவர் இந்த சிலைகளை வாங்கி இலண்டனிலுள்ள பிரித்தானிய நூதனசாலைக்கு 1806 இல் கடல் மூலமாக அனுப்பினார். இவை “எல்”யின் பளிங்குகள் என பெயரிடப்பட்டு தற்பொழுதும் அங்கு காணப்படுகின்றன. இந்தியாவிலுள்ள தாஜ்மஹால், நியுயோர்க்கிலுள்ள சுதந்திர மாதாவின் சிலை, உரோமிலுள்ள கொலிசியம் ஆகிய அனைத்தும் அமில மழையினால் பாதிக்கப்பட்டவையாகும்.



நன்னீரில் நேரடியாக விழும் மழையின் அமிலத் தன்மை, மழையின் அளவு, அமில மழையைப் பெறும் நீர் நிலையின் பரிமாணம் என்பனவற்றிற்கு அமைய உடனடியாகவே அது நன்னீரின் இரசாயனத்தை மாற்றமடையச் செய்யலாம். மழையின் போது உருவாகும் மேற்பரப்பு நீரோட்ட நீரின் தரம், அது அடையும் நீர் நிலையைச் சூழவுள்ள மண்கள், பூகற்பவியல் என்பனவற்றினால் பாதிக்கப்படலாம். சூழவுள்ளவை சுண்ணக்கல் ஆயின் மழை நீரிலுள்ள சில அமிலத்தன்மை நடுநிலையை அடையலாம்.


இதேவேளை அடித்தளப்பாறை கருங்கல், பளிங்குப் பாறை என்பனவற்றைக் கொண்டிருக் குமாயின் மழையினால் அவை கரைக்கப்பட்டு, அலுமினியம் போன்ற நச்சுத் தன்மையான உலோகங்களை நீர் நிலைகளிற்குக் கொண்டு செல்லலாம். நீரின் pH இனால் நுண்ணுயிர்களின் குடித்தொகையில் பாதிப்புகள் ஏற்படலாம். அமிலத்தன்மை அதிகமாகும் போது குடித் தொகையானது பக்றீரியாவிலிருந்து, பங்கசுவாக மாற்றமடையலாம்.

நீரில் வாழும் பெரும்பாலான முள்ளந்தண்டில்லாத விலங்குகளிற்கு அவற்றின் உடற்றொழிலியல் அனுசேப நடவடிக்கைகளிற்கு சோடியம், பொட்டாசியம் என்பன அவசியமாகும். இந்த அயன்களின் செறிவு அமில நீரில் குறைவாகவே காணப்படும். அமில நீரில் ஐதரசன், அலுமினியம் அயன்களே அதிகளவில் காணப்படும். பெரும் எண்ணிக்கையான நீர் நிலைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் நீரின் pH இன் அளவு குறையும் போது கிறஸ்டேசியா விலங்கினங்களின் ஓடுகளின் தடிப்பு, அவற்றின் குடித்தொகை எண்ணிக்கை என்பன குறிப்பிடத்தக்களவு குறைவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மீன்களின் உணவுகளிற்கு கிறஸ்டேசியா இனங்கள் மிகவும் முக்கியமானவையாகும். பல மீன் இனங்கள் நீரின் அமிலத் தன்மையால்பாதிக்கப்படுகின்றன. சோடியம், குளோரைட் என்பனவே மீன்களின் குருதி திரவவிழையத்தில் (blood plasma) காணப்படும் முக்கியமான இரண்டு அயன்களாகும். மீனின் பூக்கள் (படைடள) சிறுநீர் என்பனவற்றின் மூலம் அகற்றப்படும். இவ்விரண்டு அயன்களையும் மீளவும் பிரதியீடு செய்தல் வேண்டும். ஆனால் அமில நீரில் இம்மாற்றம் இடம்பெறுவதில்லை. இதன் விளைவாக உடற் கலங்கள் பாதிக்கப்பட்டு மீன்களில் உயிரிழப்பு ஏற்படலாம்.

மண்ணிலுள்ள அலுமினியத்தை, அமில மழை கரைக்கலாம். இதன் விளைவாக அலுமினியத்தின் செறிவு அதிகரித்து, நீரின் pH பெறுமானம் 5.0 ஐ விடக் குறையலாம். இது மீன்களிற்கு ஆபத்தானதாகும். ஏனெனில் அலுமினியம் ஒக்சைட்டுகளினால் மீன்களின் பூக்கள் அடைபட்டு மூச்சுத் திணறல் ஏற்படலாம். கட்மியம், செப்பு, நாகம், ஏனைய பாரமான உலோகங்கள் என்பனவற்றையும் அமில நீர் அதிகளவில் கொண்டிருக்கலாம். இதனால் மீன்களின் வன்கூட்டுத் தொகுதியில் விகாரங்கள் ஏற்படலாம். மீன்களின் முட்டைகள் அமிலத் தன்மைக்கு மிகவும் உணர்திறன்






கொண்டனவாகும். pH 4.5 ஆகக் காணப்படும் போது நன்னீர் மீன்களின் முட்டைகளின் இறப்பு 80 வீதமாகக் காணப்படும். pH 5.5 ஆகக் காணப்படும் போது 18 வீதமாகவும்,ிர் 7.5 ஆக உள்ள போது இறப்பு 2 வீதத்திலும் குறைவாகக் காணப்படும். நோர்வேயில் மேற்கொள்ளப்பட்ட ஏராளமான ஆய்வுகளில் நீரின் அமிலத் தன்மைக்கும் வஞ்சிர மீன் வகைகளின் குடித் தொகைக்குமிடையே எதிர் மறையான தொடர்பு அவதானிக்கப்பட்டது.

நியுயோர்க்கிலுள்ள அடிரொன்டக் மலைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் 5 ஐ விடக் குறைவான pH ஐக் கொண்ட 40 ஏரிகளில் 19இல் மீன்கள் எதுவும் இல்லாதிருப்பது அவதானிக்கப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவிலுள்ள 400 ஏரிகள்200இல் அமிலத் தன்மையின் காரணமாக அவற்றிலுள்ள மீன்கள் அழிந்துபோய்விட்டன. பிரித்தானியாவில் 5ஐ விடக் குறைவான pH ஐக் கொண்ட அருவிகளில் 28 வீதமானவைகளில் மாத்திரமே கபில நன்னீர் மீன்கள் காணப்பட்டன. ஆனால் 6.5 ஐ விட அதிகமான pH ஐக் கொண்ட 95% நீர் நிலைகளில் கபில மீன்கள் காணப்பட்டன. மறுபுறம் அமில நீரில் விலாங்கு மீன்கள் பரவலாகக் காணப்பட்டன. ஆனால் அவற்றின் உயிர்த் திணிவு 6.0 ஐ விட அதிகமான pH ஐக் கொண்ட நீரிலுள்ளதுடன் ஒப்பிடும் போது 5.5 ஐ விடக் குறைவான pH ஐக் கொண்ட நீரில் மூன்று அல்லது நான்கு மடங்கு குறைவாகக் காணப்பட்டன. ிர் பெறுமானம் 6 – 7 வரை காணப்படும் போது மீன்களை மோசமாகப் பாதிப்பதில்லை எனவும், pH இன் அளவு 4.5 ஐ விடக் குறையும் போது பெரும்பாலான மீன்களிற்கு ஆபத்தானதாக மாறும் என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்றாகும்.

பெரும்பாலான ஈருடக வாழிகளின் முட்டைகள் அமில நீரினால் மோசமாகப் பாதிக்கப்படும். இதேபோன்றே பெரும்பாலான பறவையினங்களும் பாதிக்கப்படும். நீரில் வாழும் கீரி இனங்களின் (Otter) சுற்றாடலின் pH பெறுமானம் குறையும் போது, அவற்றின் எண்ணிக்கையும் குறைவது அவதானிக்கப்பட்டுள்ளது.



வடக்குக் கிழக்கில் மழை தரும் பாதிப்புக்களுக்கு அபிவிருத்தித் அபிவிருத்தித் திட்டங்கள் தான் காரணமா?

**கஜீபன், உடுப்பிட்டி**



**பதில்:-**

ஒரு திட்டத்தை செயற்படுத்தத் தொடங்குவதற்கு முன் திட்டமிடுவது மிக மிக முக்கியம். திட்டமிடல் பிரிவு என்றே ஒரு பிரிவு சில பல மாதங்களாக கள நிலவரங்களை ஆராய்ந்து அதற்கேற்ப செயற்திட்டங்களில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். ஆனால் எமது மண்ணில் எதுவுமே ஒழுங்காக நடப்பதாக தெரியவில்லை.




**இலக்கியத்தில், இலக்கணத்தில், இதிகாசத்தில், அறிவியலில், ஆன்மீகத்தில், நடந்தவற்றில், நடப்பவற்றில், கற்றவற்றில், கேட்டவற்றில், பார்த்தவற்றில்** என்று ஐயங்கள் பல எழுந்திருக்கும். பதில் தெரிந்து கொள்ள வேண்டிய கேள்விகளாக, பலரும் அறிந்திருக்க வேண்டிய கேள்விகளாக அவை இருந்தால் அந்த கேள்விகளை எமக்கு அனுப்புங்கள்.

**பின்வரும் வழிகளில் உங்கள் கேள்விகளை எமக்கு அனுப்புங்கள்**

www.thumi.org

thumi2016@gmail.com


www.facebook.com/Thumi06

அண்மையில் நீங்கள் கண்டு வியந்த ஒரு அசாத்திய கண்டுபிடிப்பு என்ன?

**சாருஜன், உடுவில்**

**பதில்:-**

கமலஹாசனின் பிறந்தநாளுக்காக விக்ரம் படத்தின் ஒரு புகைப்படம் வெளியிட்டார்கள். அதில் அவர் துவக்கு வைத்திருக்கும் கோணத்தை கணித்த கணித மேதை ஒருவன் அது 67 என்றும் கமலின் வயதும் 67 என்றும் அதற்காக 67 பாதையில் துவக்கைப்பிடித்து நடித்த தலைவன் வாழ்க என்றும் பதிவிட்டிருக்கிறான். இதைவிட ஒரு அசாத்திய கண்டுபிடிப்பு இருக்குமா என்ன?



சிந்திக்க வைக்கிற மாதிரி ஒரு கதை சொல்லுங்கோ..

*சௌமியா, கோண்டாவில்*

**பதில்:-**

நண்பன்.1: வாழ்க்கையிலே ஒருவருக்கு சகிப்புத் தன்மையும் சாமர்த்தியமும் வேண்டும்.

நண்பன்.2: சகிப்புத் தன்மைக்கும் சாமர்த்தியத்துக்கும் என்ன சம்பந்தம்?

நண்பன்.1 : நான் புரிய வைக்கிறேன்.ஒரு தம்ளரிலே கொஞ்சம் சாக்கடைத் தண்ணீர் கொண்டு வாருங்களேன்.

நண்பன்.2: இதோ இருக்கு சார்,நீங்கள் கேட்ட சாக்கடைத்தண்ணீர்.

நண்பன்.1 : இப்படி வைங்க.நான் என்ன செய்றேன்னு கவனிங்க.இந்த சாக்கடைத் தண்ணீரை என் விரலால் தொட்டு கொஞ்சம் கூட முகம் சுளிக்காமல் இதோ என் நாக்கில வச்சுக்கிறேன்.இது தான் சகிப்புத் தன்மை.எங்கே,என்னை மாதிரி நீங்களும் செய்யுங்கள் பார்க்கலாம்!

நண்பன்.2 : அது ஒண்ணும் க்‘டமில்லை. இதோ பாருங்கோ,நானும் அதைத் தொட்டு நாக்கிலே வைச்சுக்கிட்டேன்.



நண்பன்.1: சரி,இப்போ உங்களுக்கு சகிப்புத் தன்மை இருப்பது உறுதி ஆகி விட்டது. இருந்தாலும் சாமர்த்தியம் போதாது.

நண்பன்.2: எப்படிச் சொல்றீங்க?

நண்பன்.1 ஒரு வி‘யம் நீங்க கவனிக்கலை.நான் அந்த சாக்கடைத் தண்ணீரை நடு விரலால் தொட்டேன்.ஆனால் வாயில வச்சது ஆள் காட்டி விரலை.நீங்க தொட்ட விரலாலே நாக்கிலே வச்சுட்டீங்க.இது தான் சாமர்த்தியம் போதாதுன்னு சொன்னது.

நண்பன்.2 : நான் மறுக்கலே.இருந்தாலும் ஒண்ணுசொல்றேன்.தப்பா நினைக்காதீங்க.இந்த டம்ளரில இருக்கிறது சாக்கடைத் தண்ணீர் இல்லை.என் மனைவி போட்ட காபி.

நண்பன்.1: பலே ஆள் சார் நீங்க!பார்க்கிறதுக்கு வித்தியாசமே தெரியலே!

நண்பன்.2 : குடிச்சுப் பாருங்க .அப்பவும் வித்தியாசம் தெரியாது.!

எனது எதிர் காலம் தொடர்பாக மிகப்பெரிய கனவுகள் உண்டு. ஆனால் அதைச் சொன்னால் என்னைச் சுற்றி இருப்பவர்கள் நக்கலடிக்கிறார்கள். என்ன செய்வது?

*(பெயர் குறிப்பிட விரும்பவில்லை)*

**பதில்:-**

உங்கள் எதிர்கால திட்டங்கள் குறித்து மற்றவர்கள் சிரிக்கவில்லை என்றால் அது சர்வசாதாரணமானது என்று அர்த்தம். உங்கள் கனவுகள் கனதியானது என்று நினைக்கிறேன். அவற்றைப் பற்றி எல்லோரிடமும் பகிராதீர்கள். பலர் இங்கு பொறாமை நிறைந்தவர்கள். முடிந்தால் இவர்களை உங்களைச்சுற்றி வைத்திருங்கள்.



1. உங்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பவர்கள்
2. உங்களில் நம்பிக்கை கொண்டவர்கள்
3. உங்கள் மதிப்பு தெரிந்தவர்கள்
4. உங்களை கவர்ந்தவர்கள்
5. உங்கள் வெற்றியில் அக்கறை கொண்டவர்கள்

இப்படிப்பட்ட ஒருவரையாவது கண்டுபிடித்துவிட்டாலே மிகப்பெரிய அதிர்ஷ்டசாலி நீங்கள். அப்படி ஒருவரையும் கண்டுபிடிக்கவில்லையா? கவலையை விடுங்கள்! அந்த நபராக நீங்களே உங்களுக்கு மாறுங்கள்.

பால் ரீ குடிச்சிட்டு இருந்தன். பால் மாவில் கைய வைச்சாங்க. சரி போனாப் போகட்டும் என்று பிளேன் ரீ குடிச்சன். சீனியில் கை வச்சாங்க. என்ன கொடுமைன்னு சுடு தண்ணி குடிச்சிட்டு இருக்கன். இப்ப காஸிலும் கையை வைச்சிட்டாங்க. என்ன செய்யுற இப்ப?

*ரிஷி, தெல்லிப்பழை*

**பதில்:-**

பச்சத் தண்ணிய குடிங்க ரிஷி..
அதாவது கிடைக்குதேன்னு
சந்தோசப்படுங்க!

அண்மையில் ஒரு கவிதை வாசிச்சன்.
நீங்களும் வாசியுங்க.

பிளேன்ரீ வேண்டாம் அங்கர் கேட்டேன்
தேத்தண்ணி குடிக்க சீனி கேட்டேன்
சமைச்சு சாப்பிட ஹாஸ் கேட்டேன்
சம்பல் போட ரின்மீன் கேட்டேன்
வாகனம் ஓட பெற்றோல் கேட்டேன்
போதை ஏத்த சாராயம் கேட்டேன்
சுற்றுலா போக பாஸ் கேட்டேன்
கல்யாணம் கட்ட பெர்மிசன் கேட்டேன்
சுத்தி திரிய வாகனம் கேட்டேன்

இத்தனை கேட்டும் கிடைக்கவில்லை
இதிலே எதுவும் நடக்கவில்லை

இந்த நாடே நாடே வேண்டாம் என்று
வெளியே போக விசாவை கேட்டேன்

அதுவும் அதுவும் கிடைக்கவில்லை
வாழ்வே வாழ்வே வேண்டாம் என்று
மரணம் மரணம் மரணம் கேட்டேன்........





எஸ்.எஸ்.நுஜன்



T-20 உலகக்கோப்பை ௨௦௨௧

# நடந்தது என்ன?

2021 க்கான டி20 உலக கிண்ண போட்டிகள், கடந்த மாதம் 17ம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பமானது. இதன் இறுதி போட்டியில் முறையே இங்கிலாந்து மற்றும் பாக்கிஸ்தான் அணிகளை அரையிறுதியில் வீழ்த்திய ட்ரான்ஸ்-தஸ்மான் நாடுகளான நியூஸிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா பங்கெடுத்தனர் இதில் ஆஸி வென்று, தனது முதலாவது டி20 உலக கிண்ணத்தை வெற்றி கொண்டது.

## ஆஸ்திரேலியா

தொடர்ச்சியாக ஐந்து டி20 தொடர்களில் தோல்வி அடைந்த நிலையில் இம்முறை டி20 உலக



கிண்ணத் தொடருக்கு வந்ததால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அணியாக இருக்கவில்லை. ஆனால் அனுபவம் வாய்ந்த வீரர்களை கொண்டிருந்த படியால் பேப்பரில் வலுவான அணியாக இருந்தது . இங்கிலாந்திடம் மட்டும் சூப்பர் 12 சுற்றில் தோற்ற இவ்வணி அரையிறுதியில் தொடர்ச்சியாக UAE இல் வெற்றி மேல் வெற்றிகளை குவித்து வந்த பாகிஸ்தானினை வீழ்த்தி இறுதி போட்டியில் நியூஸிலாந்தினை வெற்றி கொண்டு முதல் முறையாக டி20 உலக சாம்பியனாகி இருக்கிறது. 2010இல் இறுதிக்கு முன்னேறிய ஆஸி, T20 உலக கிண்ணத்தினை ஆஷஸ் வைதிரிகளான இங்கிலாந்திடம் இழந்தமை குறிப்பிடத்தக்கது.

## நியூஸிலாந்து

2015 மற்றும் 2019 உலக கிண்ணங்களில் இறுதி போட்டிக்கு முன்னேறியதோடு இவ்வாண்டு உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் வென்று அசத்தியதோடு கடந்த T20



உலக கிண்ணத்தில் அரையிறுதிக்கு வந்த இவ்வணி இம்முறையும் இறுதிக்கு முன்னேறி மூன்று விதமான போர்மட்களிலும் தாம் சிறந்தவர்கள் என நிரூபித்துள்ளனர். இறுதி போட்டியில் அணித்தலைவர் கேன் வில்லியம்ஸனின் சிறப்பான துடுப்பாட்டத்தால் வெற்றி பெறக்கூடிய இலக்கினை ஆஸிக்கு நிர்ணயித்து இருந்தாலும் ஆஸியின் ஆரம்ப வீரரான டேவிட் வார்னர்க்கு சரியான matchup பந்துவீச்சாளர் ட்ரெண்ட் போல்ட்ஜ தவிர்த்து வேறு ஒருவர் இல்லாமையால் கிண்ணம் வெல்லும் வாய்ப்பை இழந்துள்ளது. அனைவரினதும் இரண்டாம் விருப்பத்திற்குரிய அணி.

### இங்கிலாந்து

கிண்ணம் வெல்லும் எதிர்பார்க்கப்பட்ட முதல் நிலை அணி, சூப்பர் 12 இல் எல்லா போட்டிகளிலும்




வென்று அரையிறுதிக்கு முன்னேறியிருந்தாலும் அரையிறுதியில் நியூஸிலாந்திடம் இதில் தோற்றுப்போனது. பென் ஸ்டோக்ஸ் மற்றும் ஜோர்ல ஆர்ச்சர் ஆகியோரை தொடருக்கு முன்னரே இழந்ததோடு ஆரம்ப வீரரான ஜேசன் றோய் மற்றும் பந்துவீச்சாளர் மில்ஸ் ஆகியோரையும் தொடரின் நடுவிலே இழந்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

### பாக்கிஸ்தான்



இங்கிலாந்து போல் சூப்பர் 12 போட்டிகள் அனைத்திலும் வென்று அரையிறுதிக்கு முன்னேறிய பாக்கிஸ்தான், க்நோக்கவுட் போட்டிகளில் இதுவரை தாம் வீழ்த்தியிராத ஆஸியினை சந்திக்க வேண்டியிருந்தது. ஆனால் மறுபடியும் ஆஸி பாக்கிஸ்தானுக்கு தோல்வியை பரிசளித்தது. அத்துடன் ஐக்கிய அரபு இராச்சியத்தில் பாகிஸ்தானின் தொடர்ச்சியான வெற்றிகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

### இந்தியா

இம்முறை தொடரை நடத்திய நாடு. இங்கிலாந்து போல் அதிகம் கிண்ணம் வெல்ல வாய்ப்புள்ள அணியாக

பெரிதும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஆனாலும் முதல் போட்டியிலே முதல் தடவையாக பாகிஸ்தானிடம் உலக கிண்ண ஆட்டத்தில் தோற்று போனது. பிறகு நியூஸிலாந்துக் கெதிராவும் தோற்று அரையிறுதிக்கு தகுதி பெறமுடியாமல் போனது. கடைசி மூன்று போட்டியிலும் இந்தியாவுக்கு ஆறுதல் வெற்றி கிடைத்தது. இத்தொடருடன் விராட் கோஹ்லி T20 அணித்தலைவர் பதவியில் இருந்து விலக ரவி சாத்திரி உம் பயிற்சியாளர் பொறுப்பில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். புதிய தேர்வாளர் குழு தெரிவு செய்த அணியில் குறிப்பிடத்தக்க சில முன்னணி வீரர்கள் விலக்கப்பட்டு இருந்தமையும் தோல்விக்கு காரணமாகலாம்.




## இலங்கை

நேரடியாக சூப்பர் 12 க்கு தகுதி பெறாமல் முதல் சுற்று ஆட்டத்தில் பங்கெடுத்த இலங்கை, முதல் சுற்றில் வென்று சூப்பர் 12 க்கு முன்னேறி இருந்தாலும் அரையிறுதிக்கு முன்னேற இங்கிலாந்து, ஆஸி, மற்றும் தென்னாபிரிக்கா அணிகளை வெற்றி




கொள்ள முடியவில்லை. ஆனால் சரித் அசலாங்க, பதும் நிஸ்ஸங்க போன்ற துடுப்பாட்ட வீரர்களும் வணித்து ஹசரங்க, மகேஷ் தீக்சனா போன்ற சுழற் பந்துவீச்சாளர்களும் இலங்கைக்கு கிடைத்துள்ளனர். ஆனால் வரும் அடுத்த 2022 T20 உலக கிண்ணத்திலும் இலங்கை முதல் சுற்று ஆட்டங்களில் ஆடி தான் சூப்பர் 12 க்கு முன்னேறமுடியும்.

இத்தொடரின் ஆட்டநாயகனாக ஆஸியின் ஆரம்ப ஆட்டக்காரரான டேவிட் வார்னர் உம் இறுதி போட்டியின் நாயகனாக மிட்செல் மார்ஷ் உம் தேர்வாகி உள்ளனர்.

## டி20 உலக கிண்ணம் 2022

அடுத்த வருடம் ஆஸ்திரேலியாவில் அடுத்த T20 உலக கிண்ண தொடர் நடைபெற உள்ளது. இதன் சூப்பர் 12 சுற்றுக்கு நடாத்தும் நாடு மற்றும் இம்முறை கிண்ணம் வென்ற அணியாக ஆஸ்திரேலியா, இரண்டாம் இடம் பிடித்த அணியாக நியூஸிலாந்து மற்றும் ICC T20 தரவரிசையில் நவம்பர் 15 ம் திகதியில் அடுத்த முதன்நிலை ஆறு இடங்களில் உள்ள இங்கிலாந்து,

இந்தியா, பாக்கிஸ்தான் தென்னாபிரிக்கா, ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகள் நேரடியாக முன்னேறியுள்ளனர். மற்றைய நான்கு அணிகளும் முதல் சுற்று ஆட்டங்களில் இருந்து தெரிவாகும். 2022 க்கான முதல் சுற்று ஆட்டங்களுக்கு இம்முறை சூப்பர் 12 க்கு முன்னேறிய இலங்கை, நமீபியா மற்றும் ஸ்காட்லாந்து உடன் தரவரிசையில் பத்தாம் இடத்தில் உள்ள மேற்கிந்திய தீவுகள் தெரிவாகியுள்ளனர். அடுத்த நான்கு அணிகளும் qualifier (தகுதிகாண்) தொடர் மூலம் தெரிவாகும்.




## 1200 அடி உயரத்தில் தொங்குவதற்கான புதிய சுற்றுலா தளம்

நியூயார்க் நகரில் உள்ள ஹட்சன் யார்ட்ஸ் எனும் வானுயர்ந்த கட்டடத்தில் "சிற்றி கிளைம்ப்" எனும் புதிய சுற்றுலா தளம் நவம்பர் 9 இல் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதில் சுமார் 1200 அடிகள் மேலே ஏறிய பின்னர் அங்குள்ள தளத்திலிருந்து பாதுகாப்பு பெல்ட்டினை அணிந்து சிறிது நேரம் வெளியே தொங்கி கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

